RESEARCH ARTICLE

INTERNATIONAL RESEARCH JOURNAL OF TAMIL
சர்வதேசத் தமிழ் ஆய்விதழ்

DOI: 10.34256/irjt224s2165

OPEN ACCESS

# முருக வழிபாட்டில் அலகு குத்துதலில் அறிவியல் காரணிகள் - ஓர் ஆய்வு

சீ. முத்துலட்சுமி [அ, *]

[அ] தமிழாய்வுத்துறை, உருமு தனலெட்சுமி கல்லூரி, திருச்சிராப்பள்ளி-620019, தமிழ்நாடு, இந்தியா.

# A Study of Scientific Factors in Lord Murugan Worship

S. Muthu Lakshmi [a, *]

[a] Department of Tamil, Urumu Dhanalakshmi College, Thiruchirappalli-620019, Tamil Nadu, India

* Corresponding Author: bharathi.mmullai@gmail.com

Received: 08-09-2022
Revised: 05-10-2022
Accepted: 08-10-2022
Published: 15-11-2022

Check for updates

## ABSTRACT

Worshipping God is the treasury of human society. This article is on the basis of folk events found in Palani Murugan worship. In Murugan worship, people's culture, customs and lifestyles become the object of study. This article brings forth the rituals that takes place during Lord Murugan festivals, such as dance, songs, music, taking Kaavadi, paying penance to lord, unit piercing and so on. All this customs and rituals of the people are explored here in a psychological manner. This article documents the scientific factors involved in unit piercing and the benefits of unit piercing.

**Keywords:** Lord Murugan, Murugan Worship, Piercing, Culture

## முன்னுரை

மனித சமுதாயத்தின் கருவூலமாகத் திகழ்வது இறைவழிபாடு. பழனி முருக வழிபாட்டில் காணலாகும் நாட்டுப்புற நிகழ்வுகளைக் களமாகக் கொண்டு இவ்வாய்வு மேற்கொள்ளப்பட்டுள்ளது. முருக வழிபாட்டில் மக்களின் பண்பாடும், பழக்க வழக்கங்களும், வாழ்வியல் முறைகளும் ஆய்வுக்குரிய பொருளாகின்றன. பழனி முருகனை வழிபடும் மக்கள் விழாக்காலங்களில் இறைவனைப் பூசித்து ஆடியும், பாடியும், இசையினை முழக்கியும், காவடி எடுத்தும், அலகு குத்தியும், நேர்த்திக்கடன்களைச் செலுத்துவதிலும் காணலாகும் இறைவழிபாட்டு நம்பிக்கைகளை வெளிக்கொணர்வதே இக்கட்டுரையின் நோக்கமாகும்.

இறைவனுக்குக் காணிக்கை செலுத்த வரும் மக்களின் நம்பிக்கை மற்றும் மரபு வழியிலான பழக்கவழக்கங்கள், சடங்கு முறைகள் முதலான செயல்பாடுகள் இங்கு உளவியல் முறையில் ஆராயப்படுகிறது. மேலும் அலகு குத்துவதில் காணலாகும் அறிவியல் காரணிகளையும், அலகு குத்துவதால் ஏற்படும் பயன்கள் குறித்தும் இங்கு ஆவணப்படுத்தப்படுகிறது.

## முருக வழிபாடு

சங்க காலம் முதலே முருக வழிபாடு தமிழகத்தில் நாட்டுப்புற மக்களின் வாழ்வியலில் கூறாகவே இருந்து வந்துள்ளது. 'முருகு' என்றால் அழகு, இனிமை, இளமையோன் என்று பொருள்படும்

இதனையே,

“சேயோன் மேய மைவரை உலகம்”

என்று முருக வழிபாடு குறித்து தொல்காப்பியர் குறிப்பிடுகின்றார் (Thamizhannal, 2014).

தமிழ் மக்களின் மனதில் முருகப் பெருமான் சிறு குழந்தையாகவே இடம் பெற்றுள்ளார். அவ்வகையில் பழனியம்பதியில் கோயில் கொண்டுள்ள முருகப் பெருமான் பாலகனாகவே காட்சி தருகிறார்.

## வேண்டுதல்

மக்கள் தம் வாழ்வியல் விருப்பங்களுக்காக இறைவனிடம் நேர்த்திக் கடன் செய்வதாக வேண்டிக் கொள்வதும், அதனைத் தவறாது நிறைவேற்றுவதும் சடங்காகக் கருதப்படுகின்றது. இவ்வேண்டுதலை “நேர்த்திக் கடன் என்றும் நேர்ச்சை என்றும் நேமிசம்” என்றும் கூறுவர். (Kalyanasundaram, 1989).

முருகனை வழிபடும் மக்கள் தங்களுக்கு உள்ள குறைகளை இறைவனிடம் வேண்டிக் குறைகள் நீங்கி விட்டால் அதற்கு இன்னது செய்வேன் என்று வேண்டிக்கொண்டு குறை தீர்ந்ததும் செய்யும் சடங்கிற்கு ‘நேர்த்திக் கடன்’ என்று பெயர். நீண்ட நாட்களாக நோயால் பாதிக்கப்பட்டு குணமாகாமல் அவதிபடுபவர்கள் முருகனிடம் அந்நோயை குணமாக்கிவிட்டால் அலகு குத்திக் காவடி எடுப்பதாக வேண்டிக் கொள்வர்.

## அலகு குத்துதல்

மனிதன் தனக்கு இறைவனின் சினத்தினால் நோய்கள் ஏற்படுவதாக எண்ணி இறைவனை நாடுகின்றான். இறைவன் மீது நம்பிக்கை கொண்ட மக்கள் தங்களுக்கு ஏற்படும் துன்பங்களைப் போக்க வேண்டி இறைவனிடம் தன்னை தனிமைப்படுத்திக் கொள்ளும் விதமாக வேண்டுதலை நிறைவேற்றினர். தீராத நோய், கணவன், மனைவி பிரச்சனை குழந்தைகளின் நலன் கருதி அலகு குத்துவதாக வேண்டிக் கொள்வர். இவ்வேண்டுதலானது ஒரு நாளில் வேண்டிக்கொண்டு மறுநாளில் நிறைவேற்றுவது அல்ல. கோவில் திருவிழாவில் வேண்டுதலை நிறைவேற்றும் முகமாக வருடக் கணக்கில் காத்திருந்து கடும் விரதமிருந்து வேண்டுதலை நிறைவேற்றுவர். அவ்விதமே முருகனுக்குக் காவடி எடுப்போர் தங்களது உடலை வருத்தி கடுமையான விரதம் இருந்து அலகு குத்தி வழிபட்டு வருவர்.

கூர் கம்பிகளை உடலில் குத்திக் கொள்வதே அலகு குத்துதல் எனப்படும். உடலில் உருவாகும் சில நோய்களுக்கான மூல காரணம் உடலில் உள்ள ஒவ்வொரு உறுப்புகளின் நுட்பமான புள்ளிகளில் இருப்பதாகவும், அந்தப் புள்ளியில் குறிப்பிட்ட அழுத்தம் ஏற்படுத்துவதன் மூலம் அது தொடர்புடைய நோய் நீக்கப்படும் என்றும் அக்குபஞ்சர் மருத்துவம் குறிப்பிடுகின்றது. இதன் அடிப்படையிலேயே அலகு குத்துதல் என்ற ஒரு வழிபாட்டு முறையை இறை வழிபாட்டில் இறையடியார்கள் உருவாக்கியதாகக் கருதப்படுகிறது.

## அலகு குத்துதலின் வகைகள்

அலகு குத்துதல் ஆறு வகைப்படும். அவை, 1. வாயலகு குத்துதல், 2. நாக்கு அலகு குத்துதல், 3. முதுகு பின்னால் வாள் அலகு குத்துதல் 4. முதுகு பின்னால் கொக்கி அலகு குத்துதல் 5. வயிற்று அலகு குத்துதல், 6. நாக்கு, கன்னம், கை, உடம்பின் பிற பகுதிகளில் அலகு குத்துதல்.

அலகு குத்திக் கொள்ளும் கருவிகளாக குண்டூசி, கோணி ஊசி, கொக்கிகள், வேல் முதலானவை அலகு குத்தும் கருவிகளாகப் பயன்படுத்தப்படுகின்றன.

### வாய் அலகு குத்துதல்

பக்தர்கள் தங்கள் வாயின் கன்னத்தின் ஒரு பகுதியில் வேலைச் சொருகி மற்றொரு கன்னத்தின் ஊடாகச் சொருகி வெளிப் பகுதியில் கொண்டு வரப்படும். மேலும் காவடி எடுத்து முருகனை வழிபடுவர்.

### நாக்கு அலகு குத்துதல்

சில பக்தர்கள் வாயிலிருந்து நாக்கினை வெளியே எடுத்து சிறிய கம்பி அளவிலான வேலினை மேலிருந்து கீழ்நோக்கிக் குத்திக் கொண்டு கோவிலுக்குச் செல்வர்.

### முதுகு அலகு குத்துதல்

முதுகு அலகு குத்துதல் எனப்படுவது, முதுகினில் வாளினைச் சொருகிக்கொண்டும், சிறுசிறு கொக்கிகளை மாட்டிக் கொண்டும் கோவிலுக்கு இறைவனை வழிபட வருவர்.

### வயிற்று அலகு குத்துதல்

இறை பக்தர்கள் தம் மேல் உடம்பைச் சுற்றிலும், வயிற்றுப் பகுதியிலும் கொக்கிகளை மாட்டிக்கொண்டு வருவது.

பழனியாண்டவனுக்குத் தோளில் சுமந்து வரும் காவடிகளைப் போன்றே, உடலால் சுமந்து வரும் காவடிகளும் காணப்படுகின்றன. பழனி முருகனை வழிபடும் மக்கள் நாக்கு, கன்னம், கை, உடம்பின் பிற பகுதிகளில் சிறிய, பெரிய வேல் வடிவமுடைய ஊசியால் அலகு குத்திக்கொண்டு கோவிலுக்கு வருவர். சிலர் சின்ன ரதம் போன்ற வண்டியை தங்களின் முதுகினில் கொக்கிகளால் குத்தி முதுகோடு இணைத்து இழுத்து வருவர். அவற்றை, 1. அலகுக் (வேல்) காவடி, 2. பறவைக் காவடி, 3. தேர்க் காவடி என்பர். இக்காவடிகளை எடுத்து வரும் பக்தர்களை 'வன்தொண்டர்கள்' என்றழைப்பர்.

பழனி ஆண்டவனை வேண்டிக் கொண்டு "அலகு குத்துபவர் விழா நாளிலிருந்து விரதம் இருந்து, விரலிமஞ்சள் கொண்டு கையில் காப்புக் கட்டிக் கொள்வர்". பின்னர் இவர்கள் பழனிக்குக் காவடி எடுத்துக்கொண்டு பழனியை நோக்கி பாதயாத்திரையாக வருவர். பழனிக்கு வரும் பக்தர்கள் பழனி சண்முக நதிக்கரையில் குளித்து நீராடிவிட்டு குழுவாக ஓரிடத்தில் கூடி நிற்பர். அச்சமயத்தில் முருகனுக்குப் படையலிட்டு பூசையினை மேற்கொண்டு முருகனை வழிபடுவர். அதன்பின் அலகு குத்தும் நபர்களுக்கு அருள் வரும். அச்சமயம் அக்குழுவின் தலைமை பூசாரியான குருசாமியால் அலகு குத்தப்படுகிறது.

### அலகுக் குத்துதல் (வேல் காவடி)

பக்தர்கள் தம் நாக்கினில் சிறிய அளவிலான வேல் ஒன்றைக் குத்திக் கொண்டோ அல்லது பெரிய அளவிலான வேலினைத் தங்கள் வாயினில் குத்திக் கொண்டோ முருகனுக்கு நேர்த்திக்கடன் செலுத்துகின்றனர். இவ்வேலானது மூன்றடி முதல் இருபத்திரெண்டு அடி வரையிலான அளவு உடையதாக இருக்கும். இதனை 'வேல் காவடி' என்றழைப்பர்.

மேலும் ஒரு சில பக்தர்கள் தங்கள் வாயில் வேலினைக் குத்திக் கொள்வதுடன், உடல் முழுவதும் சிறு, சிறு கொக்கிகளைக் குத்திக் கொண்டு அக்கொக்கிகளில் பழனியாண்டவனுக்குப் பூசை செய்யத் தேவைப்படும் பூசைப் பொருட்களை மாட்டிக் கொண்டும் முருகனை வழிபடுகின்றனர். இதனைச் 'செடில் குத்துதல்' என்பர்.

## பறவைக் காவடி

பறவைக் காவடி இதனை 'அந்தரக் காவடி' என்றும் குறிப்பிடுவர். பறவைக் காவடி எடுப்போர் அக்காலத்தில் நாற்பத்தெட்டு நாட்கள் கடும் விரதமிருந்து முருகனுக்குக் காவடிப் பொருளாக மாறி, மாட்டுவண்டியில் கயிறால் இழுத்துக் கட்டப்பட்டு முதுகினில் கொக்கிகளை மாட்டி பறவை போல் பறந்த மாதிரி தொங்கிக் கொண்டு வருவர். இதனை 'அந்தரக் காவடி' என்றும் கூறுவர்.

பழனி முருகன் கோவிலுக்குத் தைப்பூசத் திருவிழாவின் பொழுது முருக பக்தர்கள் தங்கள் வேண்டுதலின் அடிப்படையில் முதுகினில் அலகு குத்திக் கொண்டு சில வருடங்களுக்கு முன்பு வரை மாட்டு வண்டியில் பறவை போல் தொங்கியவாறு அழைத்து வரப்படுவர்.

தற்பொழுது அறிவியல் வளர்ச்சியின் காரணமாய் பொக்லைன் கிரேனில் நான்கு முதல் ஐந்து பேர் வரை பறவைகள் போல் தொங்கிக் கொண்டு வருவதைக் கள ஆய்வில் காண முடிகின்றது.

தற்பொழுது இராட்சத கிரேன்களில் ஐந்து முதல் ஒன்பது பேர் வரை குதிரை பொம்மை போல் வடிவமைத்து, அதன் மீது அமர்ந்து கொண்டு, உடம்பு முழுவதும் கத்தியைச் சொருகிக் கொண்டு வெட்ட வெளியில் தொங்கிக் கொண்டு, மலையடிவாரத்தை வலம் வந்து முருகனை வழிபட்டு வருகின்றனர். இப்பறவைக் காவடியைத் தைப்பூசத் திருவிழாவின் பொழுது எடுப்பதை வழக்கமாக கொண்டுள்ளனர். வால்பாறை, சேலம் முதலான பகுதிகளிலிருந்து வரும் பக்தர்கள், பழனி சண்முகநதியில் நீராடி, இறைவனை வழிபட்டு உடலில் கொக்கிகளை மாட்டிக் கொண்டு குழுவாகத் தொங்கி வருவதைக் கள ஆய்வில் காண முடிகின்றது.

பறவைக்காவடியாக வந்த ஆவலப்பன் என்ற பக்தர் ஒருவர், "நாற்பது நாட்கள் கடுமையான விரதமிருந்து, பதினைந்து வருடங்களாக முருகனை வேண்டிக் கொண்டு இவ்வேண்டுதலை நிறைவேற்றுவதாகக் கூறினார்.

## தேர்க்காவடி

இதனை இரதக் காவடி என்றும் கூறுவர். மரத்தால் தேர் ஒன்றைச் செய்து, அத்தேரில் பழனியாண்டவன் படம் ஒன்று வைக்கப்பட்டுள்ளது, அத்தேரைச் சுற்றி வண்ணக் காகிதங்களால் அலங்கரிக்கப்பட்டும், அத்தேரில் நீண்ட கயிறு ஒன்றும் கட்டப்பட்டுள்ளது. அக்கயிற்றின் நுனியில் கொக்கிகள் மாட்டப்பட்டு, அக்கொக்கிகளை முருகனடியார்கள் தம் முதுகில் குத்திக் கொண்டுத் தேரை இழுத்துக் கொண்டு மலைக்கோயில் வரை வலம் வருவர்.

தேர்க்காவடியை இழுத்து வந்த திருவண்ணாமலையைச் சேர்ந்த அண்ணாமலை என்பவர், "நீண்டநாட்களாக வாய்பேசாமல் இருந்ததாகவும், முருகப்பெருமானை வேண்டிக் கொண்டு வழிபட்ட பின் வாய்பேச வருவதாகவும், கடந்த இருபத்தைந்து வருடங்களாகத் தைப்பூசத்தன்று இந்நேர்த்திக் கடனைச் செலுத்தி வருவதாகவும்"5 பேட்டியின் பொழுது தெரிவித்தார்.

# அலகு குத்துவதில் அறிவியல் காரணிகள்

அலகு குத்துதல் என்பது அக்குபஞ்சர் போன்ற அறிவியல் பின்னணி உடைய ஒரு வழிபாட்டு முறையாகும்." ஸ்டான்போர்டு யுனிவர்சிட்டியின் மருத்துவத் துறை (School of Medicine) தலைமையிலான ஒரு ஆய்வு, இவ்வாறு ஒரு குறிப்பிட்ட இடத்தில் ஏற்படுத்தப்படும் அழுத்தத்தின் மூலம் எவ்வாறு உயிரணுக்கள் ஆனது நோய் எதிர்ப்பு சக்தியை உருவாக்குகிறது என்று ஒரு ஆய்வு நடத்தியது. இதன் மூலம் அழுத்தம் ஏற்படும் நேரத்தில் அட்ரீனல் சுரப்பிகளால் வெளியிடப்பட்ட மூன்று ஹார்மோன்களால் உடல் முழுவதும் உயிரணுக்களின் நோயெதிர்ப்பு சக்தியானது பெருமளவில் உற்பத்தி செய்யப்படுகிறது என்பதை ஆய்வு ரீதியாகக் கண்டறிந்து கூறியுள்ளனர்.

அலகு குத்தும் பொழுது வலிக்கவே செய்யும். அலகு குத்தியவுடன் ரத்தம் வராமல் தடுக்கத் துளையிட்ட பகுதியில் திருநீற்றைப் பூசி விடுவர்.

கிடைத்துள்ள தரவுகளின் வழி ஆய்ந்த பொழுது கிடைத்த முடிவுகளாவன இறைவழிபாட்டில் பறவைபோல் தொங்கிக் கொண்டும், தேர்க் காவடி இழுத்தும், அலகு குத்திக் கொண்டும் முதலான உடல் சார்ந்த செயல்பாடுகளில் ஈடுபடும் பொழுது உடலின் உள்ளுறுப்புகளின் நுட்பமான புள்ளியில் அழுத்தம் ஏற்படுத்துவதன் காரணமாய் நரம்புகள் தூண்டப்பட்டு வாயுக்களை வெளியேற்றி உடல் பிரச்சனைகளைச் சமன் செய்கிறது. உடலில் அக்குபஞ்சர் என்னும் முறையில் அழுத்தம் கொடுப்பதால் உடற்பிணி நீங்குவதாக அறிவியல் முறையில் அறிய முடிகிறது.

## முடிவுரை

பழனி முருகன் வழிபாட்டில் வேண்டுதல் மற்றும் நம்பிக்கையின் அடிப்படையில் காணிக்கையளித்தல், காவடி செலுத்துதல் முதலான செயல்பாடுகள் மனித சமூகத்தில் தொன்று தொட்டு காலங்காலமாக நிலவி வருகின்றன. நாட்டுப்புற மக்கள் முருக வழிபாட்டைத் தங்கள் வாழ்வியல் நெறிமுறைகளில் இருந்து பிரிக்க முடியாதவாறு தங்களுக்குப் பிடித்த வகையில் நாட்டுப்புறப் பண்பாட்டோடும் மன உணர்வோட்ட அடிப்படையிலும் வழிபட்டு வரும் நிலையை அறிய முடிகின்றது நேர்த்திக்கடனாகச் செலுத்தப்படும் இக்காணிக்கைப் பொருட்களைச் செலுத்துவோர் உளப்பாட்டினை மரபு வழியான சடங்குகளோடும் பழக்க வழக்கங்களோடும் பொருத்திப்பார்த்து இக்கட்டுரையில் ஆராயப்பட்டுள்ளது.இவ்வாய்வின் மூலம் கிடைத்துள்ள பல தரவுகள் மக்களுக்கும், நாட்டுப்புற ஆய்வாளர்களுக்கும் நல்ல பயனுள்ள ஆவணமாகப் பயன்படும்.

## References

Kalyanasundaram, (1989) Thiruchendur Murugan Kovil Varalaru, Thirukovil Veliyedu, Thiruchendur

Thamizhannal, (2014) Tholkappiyam, Ganapathy Presuram, Chennai, India

**Funding:** No funding was received for conducting this study.

**Conflict of Interest:** The Author has no conflicts of interest to declare that they are relevant to the content of this article.

**About the License:**

Attribution 4.0 International (CC BY 4.0)

© The Author 2022. The text of this article is licensed under a Creative Commons Attribution 4.0 International License